**நானாட்டான் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பங்குனி 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பங்குனி 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 மார்கழி 24 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டான் பிரதேச சபையின் 2013 மார்கழி 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான பேரேட்டின் வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமையால் நாட்குறிப்புப் பதிவின் மூலம் சீராக்கங்களைச் செய்தமைக்கு நாட்குறிப்புப் பதிவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்காய்வுக்கு சான்றின்மை

நிலையான வைப்பு முதலீட்டு பேரேடு பேணப்படாமையால் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ள நிலையில் வைப்பு மீதி தொகை ரூபா, 10,500,000 கணக்காய்வில் திருப்திகரமாகவோ சான்றுறுதிச்செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

#### 1.3.3 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணங்கி நடவாமைகள்** |
|---|---|
| அ) 1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்)<br>i) விதி இலக்கம் 5 (XII) | காசு, களஞ்சியப் பொருள் முதலியனவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்திடமிருந்து போதுமான பிணைப் பணங்களை பெற்றுக்கொள்ளப்பட்மையை தவிசாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| ii) விதி இலக்கம் 218 | வருட இறுதியில் காணி கட்டிடங்கள் தொடர்பான சொத்துக்களுக்கு கணிப்பு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ஆ) இலங்கை சனநாக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| i) நிதிப்பிரமாணம் 571 | 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காலம் கடந்த வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 736,595 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இ) 2009 நவம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 438 | 2013 ஆம் ஆண்டு கணிப்பீட்டு சபை அறிக்கையில் பாவிக்க முடியாத பயன்படுத்த முடியாத 82 களஞ்சியப் பொருட்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ஈ) தாபன விதிக் கோவையின் அத்தியாம் XXIV பிரிவு 4 | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இளைப்பாறிய இறந்த மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 11,248 பதவியினர் கடன் மீதிகள் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| உ) 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டி<br>அத்தியாயம் iii பிரிவு 3:4:3 | வருடாந்தம் வழங்குனரைப் பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

**1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ம் ஆண்டு பொது வரவேற்பிற்காக ரூபா 70,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் சபையானது முறையான அதிகாரமின்றி ரூபா 236,760 பொது வரவேற்பிற்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2013 மார்கழி 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 3,695,832 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது எதிராக முன்னைய ஆண்டில் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவின மிகை ரூபா 2,668,012 ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கான மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| **வருமான விபரம்** | **மதிப்பீட்டு வருமானம் ரூபா** | **உண்மை வருமானம் ரூபா** | **திரட்டிய நிலுவை 31.12.2013 உள்ளபடி ரூபா** |
|---|---|---|---|
| வீதவரிகளும் வரிகளும் | 790,000 | 141,300 | - |
| வாடகைகள் | 3,031,740 | 6,278,311 | 1,235,827 |
| உரிமங்கள் | 495,500 | 414,670 | - |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 2,599,600 | 2,096,629 | - |
| பற்றாணைச்செலவுகள் குற்றப் பணங்கள், தண்டங்கள் | 35,000 | 72,545 | 63,000 |
| ஏனைய வருமானங்கள் | 1,639,200 | 1,667,953 | - |
| **மொத்தம்** | **8,590,540** | **10,671,408** | **1,298,827** |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 63,000 ஆகும்.

### 2.2.3 அறவிடப்பட வேண்டியுள்ள வருமானம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய கடை வாடகை, இறைச்சிக்கடை வாடகை மற்றும் வரிக் கட்டணம் என்பவற்றிலிருந்து ரூபா 542,452 நிலுவையாக இருந்ததுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ மற்று செயற்திறன் இன்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கபட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் இருந்து சபையினுடைய நிதிக்கூற்றில் தொடர்ச்சியாக இணங்காணப்படாத முற்பணக் கணக்கு மீதியாக ரூபா 1,771,480 கணக்குகளில் காட்டப்பட்டு வருகின்றமைக்கு சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு நகர சபை மன்னாரினால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட கலிபவுசரை பிரதேச சபைக்கு உடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படாமை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கலாச்சார மண்டபத்திற்கான உள்ளக மின்னிணைப்பு பொருட்கள் வரையறை கூறுவிலை மூலம் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்தில் கொள்வனவு செய்ததால் சபைக்கு ரூபா 12,525 இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ) கலாச்சார மண்டபத்திற்கான புல் கற்றை மரக் கன்றுகள் பெறுமதி ரூபா 322,500 லக்விமபல நிறுவனத்திடம் கொள்வனவு செய்ததற்குரிய காசோலையை உரிய நிறுவனத்தின் பெயரில் வரையாமல் சபையயின் தொழில் நுட்ப அலுவலரின் பெயரில் காசோலை வரையப்பட்டுள்ளது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

**கலாச்சார மண்டபம் அமைத்தல் - நானாட்டான்**

கலாச்சார மண்டபம் அமைத்தலுக்கான மொத்த கிரய மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 34,274,176 அகும். இவ் வேலை சம்பந்தமாக அரச பெறுகை வழிகாட்டியின் 3:1 , 3:2 ஆகியனவற்றின் பிரகாரம் பிற்சேர்க்கை 20 (1) ஆம் பிரிவிலும் கூறியபடி பிராந்திய பெறுகைக் குழுவின் எல்லை ரூபா 25 மில்லியன் ஆக இருப்பதால் மொத்த கிரய மதிப்பீட்டின் பெறுமதியை ரூபா 25 மில்லியனுக்கு குறைத்து பிராந்திய பெறுகைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறைக்கப்பட்ட வேலையினை பிரதேச சபை நிதியை பயன்படுத்தி வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

**மின் விசிறி கொள்வனவு**

மின் விசிறி கொள்வனவு கட்டளையில் கூடிய தரத்துக்கு பதிலாக தரம் குறைந்த மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் கொள்வனவு சிட்டையில் கொள்வனவு கட்டளையில் கூறப்பட்ட தரம் ஒன்றுக்கு விலையிடப்பட்டு கொடுப்பனவு செய்ததால் சபைக்கு ரூபா 172,950 மேலதிக செலவீனமும் விளைவுத்தன்மையற்ற செலவீனமும் ஏற்படடுள்ளது.

**3.4 உள்ளகக் கணக்காய்வு**

போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான கட்டுப்பாடு